සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD
මුදල්, ආර්ථික ස්ථායීකරණ හා ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
Ministry of Finance, Economic Stabilaization & National Policies
ජේ.ආර්. ජයවර්ධන මධ්‍යස්ථානය, නො.191, ධර්මපාල මාවත, කොළඹ 07 | ஜே ஆர் ஜெயவர்தன மையம், 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 7
J.R. Jayewardene Center, No.191, Dharmapala Mawatha, Colombo 07

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No. — WBB/Notice/D/Div/2024 | ඔබගේ අංකය / உனது இல / Your No. — | දිනය / திகதி / Date — 2024.03.15 |

WBB/Circular/No.02/2024

அனைத்து மாவட்ட செயலாளர்கள்/ மேலதிக நலன்புரி நன்மைகள் ஆணையாளர் மற்றும் அனைத்து பிரதேச செயலாளர்கள்/ பிரதி நலன்புரி நன்மைகள் ஆணையாளர்கள்.

**அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் உதவித் திட்டத்தின் கீழ், முதியோர், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கும் செயல்முறை.**

01. 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட 2328/13 ஆம் இலக்க 21.04.2023 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு உதவித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட தகுதியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுநீரக நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான நன்மைக் கொடுப்பனவுகளை வழங்கும் நடைமுறை தொடர்பான பின்வரும் வழிமுறைகளை செயல்படுத்துமாறு தயவுடன் கேட்டுகொள்கிறேன்.

02. மேற்கண்ட நலன்புரி நன்மை உதவித் திட்டத்தின் அட்டவணை I இன் கீழ் தகுதியான நபர்கள் அடையாளம் காணப்பட வேண்டும் மற்றும் நலன்புரி நன்மைகளை வழங்குவதற்கு பின்வரும் நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

03. தகுதியான குடும்பங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட தகவல்கள் சரிபார்க்கப்பட்டு, ஏற்கனவே சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் , மற்றும் ஊனமுற்றவர்கள் ஆகியோர்களுக்கான கொடுப்பனவுகளைப் பெறச் சமர்ப்பித்தவர்கள் மற்றும் இவர்கள் கொடுப்பனவு பெறாவிட்டாலும் அத்தகைய நிலையில் உள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டு வழங்கப்பட்ட தகவல்களிலிருந்து அவர்களை அடையாளம் கண்டு வேறுபடுத்தவேண்டும். 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் பற்றிய தகவல்களை எமது தரவு முறைமையிலிருந்து பெறப்படவேண்டும்.

**04. காரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோயாளர்கள் மற்றும் ஊனமுற்றவர்களை அடையாளம் காணுதல்:**

කාර්යාලය / அலுவலகம் / Office — Tel: 009411-2151481, 009411-2484600/4117, Fax: 009411-2151482 | විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / e-mail — welfarebenefitboard2016@gmail.com, info@iwms.wbb.gov.lk | වෙබ් අඩවිය / இணையதளம் / Website — www.wbb.gov.lk

Scanned with CamScanner

*4.1* பின்வரும் காரணிகளின் அடிப்படையில் தகுதி பெறும் சமூகக் குழுக்களைச் சேர்ந்த அத்தகைய நபர்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.

அ) ஒரு மாதத்திற்குள் குறைந்தது இரண்டு சந்தர்ப்பங்களில் *EGFR* இன் அளவீடு *90* க்குக் குறைவாக இருப்பவர்கள் / ஒரு மாதத்திற்குள் குறைந்தது இரண்டு சந்தர்ப்பங்களில். அவர்கள் அதற்கான மருத்துவ தொழில்நுட்ப அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

ஆ) நோயாளிக்கு சிகிச்சை அளிக்கும் சிறுநீரக நோய் மருத்துவ நிபுணரிடம் இருந்து பெறப்பட்ட மருத்துவ அறிக்கை மூலம் அத்தகைய சிறுநீரக நோயை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*4.2* தகுதியுள்ள ஊனமுற்ற நபர்களை அடையாளம் காணுதல்:-

பின்வரும் காரணிகளின் அடிப்படையில் தகுதியுள்ள சமூகக் குழுக்களைச் சேர்ந்த ஊனமுற்றவர்களை அடையாளம் காணப்படல் வேண்டும்.

அ) ஊனமுற்ற நபரின் இயலாமையை சான்றளிக்கும் எலும்பியல் நிபுணர் வழங்கிய வைத்திய சான்றிதழ்.

ஆ) மாற்றுத்திறனாளி ஒருவர் உதவி சாதனத்தைப் பயன்படுத்தினாலும், மற்றொரு நபரின் உதவியின்றி அவர்களின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்பதை ஒரு எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணரின் உறுதிசெய்த சான்றிதழ்.

Welfare Benefits Board
WBB
Sri Lanka

**4.3** அஸ்வெசும சமூகக் குழுக்களைச் சேர்ந்த தகுதியான முதியோர்களை அடையாளம் காணுதல்:-

அ) தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆ) கிராம உத்தியோகத்தரின் சான்றிதழின் மூலம் *70* வயதுக்கு மேற்பட்டவர் தற்போது உயிருடன் இருப்பதற்கான சான்றுக்கடிதம்.

**5.0 அஸ்வெசும நன்மைகளைப் பெறும் சமூகக் குழுக்களில் காரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோயாளிகள், ஊனமுற்றோர் மற்றும் முதியோர்**



Scanned with CamScanner

**கொடுப்பனவுகள் என்பனவற்றிற்கு தகுதியான நபர்களை தெரிவுசெய்தல்:-**

5.1. 4 ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தின்படி, தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் அல்லது அஸ்வெசும சமூகப் பிரிவின் கீழ் தகுதிபெற்ற குடும்பங்களில் உள்ள அனைவரும் பின்வரும் ஆவணங்களை பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட வேண்டும்.

i அஸ்வெசும விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது வழங்கப்படும் *QR* குறியீடு.

ii சிறுநீரக நோயாளிகளுக்கான தொடர்பான மருத்துவ தொழில்நுட்ப அறிக்கை.

iii மேலே உள்ள பந்தி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய மருத்துவ அறிக்கை.

iv. பிறப்புச் சான்றிதழ் (முதியோர்களுக்கு மட்டும் பொருந்தும்.)

5.2 அவ்வாறு பெறப்பட்ட ஆவணங்களில் அடங்கியுள்ள அவசியமான தகவல்களை நலன்புரி நன்மைகள் பிரிவினால் கணனி முறைமையில் தரவு உள்ளீடு செய்வதற்கு பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு, சமூக சேவை அலுவலர்கள், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் ஊனமுற்றவர்களுக்கான தேசிய செயலகம் என்பனவற்றின் எந்த உத்தியோகத்தரினதும் உதவியை நாடலாம். ஆவணங்களைப் பெறும்போது ஒரு குறிப்பு எண்ணையும் வழங்க வேண்டும். அந்த ஆவணங்களை ஸ்கேன் செய்து கணினியில் உள்ளிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கு விண்ணப்பதாரருக்கு ஒரு குறிப்பு எண் கொடுக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட அந்த எண்ணையும் அதில் சேர்க்க வேண்டும். கணினி முறைமையில் இந்தத் தகவலை உள்ளிடுவதற்கான வழிமுறைகள் பற்றிய வழிகாட்டுதல்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பு எண் சகிதம் அந்த ஆவணங்களை ஒரு தனி கோப்பில் இட்டு தங்களின் நலன்புரி நன்மைகள் தகவல் அலகிற்குள் பதிவுசெய்து வைத்திருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

5.3 கணினியில் உள்ளிடப்பட்ட தரவு மற்றும் ஆவணங்கள் பிரதேச செயலாளரால் சரிபார்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

5.4 கணினி மயமாக்கப்பட்ட ஆவணங்களுக்கு பிரதேச செயலாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் இந்த நன்மைக்கு கொடுப்பனவு அஸ்வெசும குடும்பங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கின்



Scanned with CamScanner

ஊடாக இந்த உதவிகளை வழங்க நலன்புரி நன்மைகள் சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

**6.0 தற்போது நன்மைகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் காரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோயாளர் , மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் ஆகியோர் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:-**

6.1 சிறுநீரக நோய்க்கான உதவித்தொகையை சமூக சேவைத் திணைக்களமும் , மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகையை மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகமும், முதியோர்களுக்கான உதவித்தொகையை முதியோர்களுக்கான தேசிய செயலகமும் வழங்குகிறது. அத்தகைய நன்மைகளைப் பெறும் மக்களில், அஸ்வெசும நலன்புரி உதவித் திட்டத்தின் கீழ் உள்ளவர்களைக் கண்டறிந்து, மேற்படி நிறுவனங்களால் அந்த நபர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை அஸ்வெசும நன்மைக் கொடுப்பனவின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதைத் தொடங்குவதுடன் 2024 ஏப்ரல் மாதம் முதல் அவை இடைநிறுத்தப்பட வேண்டும். அஸ்வெசும உதவித் திட்டத்தின் கீழ் இந்த கொடுப்பனவுகளை ஏப்ரல் 2024 முதல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, 01.01.2024 முதல் பிரதேச செயலாளர்களால் சான்றளிக்கப்பட்ட நபர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை, இணைப்பு II இன் படி, 15 பெப்ரவரி 2024க்கு முன்னர், இந்த சபையாகும் மேலே குறிப்பிடப்பட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் வழங்க வேண்டும்.

6.2 அஸ்வெசும திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மூன்றுவகையினரான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் நபர்கள், காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் உட்பட, கணனி அமைப்பு மூலம் இனங்காணப்பட்டு பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி, ஏப்ரல் 2014 முதல், அஸ்வெசும உதவித் திட்டத்திற்கு வெளியே இவர்களுக்கான இந்த உதவித்தொகை வழங்குவது நிறுத்தப்பட வேண்டும்.

6.3 அஸ்வசும திட்டத்தில் சேர்க்கப்படாதவர்கள் 01.01.2024 அன்றிலிருந்து கொடுப்பனவுகளைப் பெறுவார்கள், மற்றும் இந்தக் காத்திருப்போர் பட்டியலில் இருப்போர் இக் கொடுப்பனவுகளுக்கு தற்போதைய அமைச்சரவையின் மூலம் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளின்படி நலன்புரி நன்மைகள் சபையிற்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் மூலம் தற்போதுள்ள முறையின் கீழ் நன்மைகளை வழங்கத் தேவையான நிதி வழங்கப்படும். நிதியமைச்சு மூலம் மாவட்டச் செயலாளர்/பிரதேசச் செயலாளர்கள்/முதியோர் செயலகம்



Scanned with CamScanner

பொருந்தும் வகையில் ஒதுக்கப்படும். இந்தப் பயனாளிகள் பட்டியலில் புதிய பயனாளிகள் எவரையும் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

6.4 தற்போது கொடுப்பனவுகளைப் பெறுபவர்களுக்கு நன்மைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை பெற மாதாந்தம் விண்ணப்பிக்கும்போது இறப்பு போன்ற காரணங்களால் தகுதியான பட்டியலில் இருந்து வெளியேறும் நபர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அஸ்வெசும உதவித் திட்டத்தின் கீழ் பயனடையும் ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரிவைச் சேர்ந்த இந்த கொடுப்பனவுகளுக்குத் தகுதியுடையவர்கள் இறப்பு அல்லது தகுதியற்ற காரணங்களால் தகுதியற்றவர்களாக மாறினால், ஏப்ரல் 2024 முதல் தரவு முறைமையில் அந்தத் தகவலை இற்றைப்படுத்த பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Signed:
ஜயந்த விஜேரத்ன
தலைவர் / ஆணையாளர்

S. Giridaran
Additional Commissioner (Coordination)
Welfare Benefit Board
Ministry of Finance

பிரதி:- i செயலாளர் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சு.

ii செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

iii செயலாளர் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு.



Scanned with CamScanner